இடமில்லையென்று தெரிவித்ததை அமைச்சர் அவர்களே, இங்கே குறிப்பிட்டார்கள். வருகின்ற காலத்திலாவது, அதனுடைய முக்கிய நிலையை அறிந்து, அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த நியாய விலைக் கடைகளைக் கட்டுவதற்கு உரிய நிதியை ஒதுக்கினால், அதற்கு அனுமதி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுபட்ட கேள்வி, வினா எண் 350, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

350—

கால்வாய் இணைப்பு

***71907—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, வைகைப் பிரிவிலிருந்து வரும் நிலையூர் கால்வாயை முல்லைப் பெரியார் பாசனத்துடன் ஒருபோக சாகுபடிக்கு பதிவுக் கால்வாயாக இணைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எம். சீனிவேல்: அம்மாவின் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதிக்கு உட்பட்ட நிலையூர் சேனல் கால்வாய், சுமார் 9 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களாக உள்ள விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி

2005 ஏப்ரல் 13]

செய்து தருகிறது. இக்கால்வாயில் விவசாயம் செய்யக்கூடிய சுமார் 2 இலட்சம் விவசாயிகள் ஒரு போகம் சாகுபடி செய்வதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் முதல் கால்வாயாக வைகையில் பாசனம் பெறக்கூடிய இந்த நிலையூர் சேனல் கால்வாய் முல்லை–பெரியாரோடு இணைக்கப்பட்டால் சுமார் 2 இலட்சம் விவசாயிகள் நல்லமுறையிலே பயன்பெற்று, விவசாயம் செய்யக்கூடிய ஒரு நிலைமையிலே இருப்பார்கள் என்பதனை அறிந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த 9 ஆயிரம் ஏக்கரையும் முல்லை–பெரியாரோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேலும் திருமங்கலம் பிரதானக் கால்வாயிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதி, வடபழஞ்சி கிராமம், முத்துப்பட்டி கிராமம், மனப்பட்டி கிராமம், சுந்தரராஜபுரம் கிராமம், வெள்ளைப்பாறைப்பட்டி, கரடிப்பட்டி, ஆலம்பட்டி, மேலகீழ்க்குடி, கீழக்கீழ்குடி, தட்டானூர் போன்ற கிராமங்களுக்கு மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட அம்மாவினுடைய ஆணைக்கிணங்க அம்மா அவர்களின் ஆசியோடு, புதிய கால்வாய் வெட்டுவதற்கு 1,13,20,000/– ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் புதிய கால்வாய் இந்த ஆண்டு தொடங்கப்படுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அன்போடு அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரி இருக்கின்ற நிலையூர் கால்வாய்க்கு வைகை ஆற்றிலிருந்து நிலையூர் படுகை அணை மூலமாக வைகை பங்கீட்டு நீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நிலையூர் கால்வாய் வைகை பழைய ஆயக்கட்டுக்கு பாத்தியப்பட்டது. பெரியார் பாசன நீரைக் கொண்டு பாசனம் செய்யக்கூடிய பகுதி தனியாக இருக்கின்றது. பெரியார் பாசனப் பகுதிக்குப் பெரியார் பங்கீட்டு நீர் தற்பொழுது பற்றாக்குறையாகவே இருக்கிறது. மேலும் தற்போது பெரியாறு அணையின் முழு கொள்ளளவு நீர் மட்டம் 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்டு இருப்பதால், பாசன நீர் பற்றாக்குறை மேலும் பெருகியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் பெரியார் பங்கீட்டு நீரிலிருந்து வைகை ஆயக்கட்டு நிலையூர் பாசனக் கால்வாய்ப் பகுதிகளுக்கு நீர்

வழங்குவது என்பதும், பெரியார் பாசனப் பகுதியாக மாற்றுவது என்பதும் இயலாத ஒன்றாகும். அவ்வாறு செய்தால், பெரியார் பாசன விவசாயிகளிடமிருந்து எதிர்ப்புகள் உருவாகும். சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளும் உருவாகும். எனவே, இக்கோரிக்கை சாத்தியமானது அல்ல என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமங்கலம் பிரதானக் கால்வாயிலிருந்து பல்வேறு கிராமங்களுக்கு புதிய கால்வாய் வெட்டுவதற்காக இங்கு கோரி இருக்கின்றார்கள். மதுரை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருக்கு அவருடைய ஒத்திசைவு கேட்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒத்திசைவு கிடைக்கப் பெற்றவுடன் அரசு அப்பணியை எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 352, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

352—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***18601—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் கிராமத்தில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வினா எண் 353, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.